மத்திய கலாசார நிதியத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை – 2011

நிருவாக சபை

2011 ஆம் ஆண்டின் மத்திய கலாசார நிதியத்தின் நிருவாக சபை:

நிருவாக சபையின் தவிசாளர்

பிரதம அமைச்சர் கௌரவ டி.எம். ஜயரத்ன

கௌரவ டீ.பி. ஏகநாயக்க
கலாச்சார, கலை அலுவல்கள் அமைச்சர்

கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன

பிரதி நிதி அமைச்சர்

கௌரவ எஸ் அமரசேகர
பிரதம அமைச்சரின் செயலாளர்

திரு. விமல் ரூபசிங்க
செயலாளர்,
கலாசார, கலை அலுவல்கள் அமைச்சு

பேராசிரியர் நிமல் த சில்வா
பணிப்பாளர் தலைமை அதிபதி
மத்திய கலாசார நிதியம்

கௌரவ பசில் ராஜபக்ஷ
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்

திரு. டபிள்யு. ஏ. ரணவீர
செயற்பாட்டுப் பணிப்பாளர்
மத்திய கலாசார நிதியம்

கலாநிதி செனரத் திசாநாயக்க
பணிப்பாளர் தலைமை அதிபதி
தொல்பொருளியல் திணைக்களம்

கௌரவ (கலாநிதி) ஜகத் பாலசூரிய
தேசிய மரபுரிமைகள் அமைச்சர்

திருமதி. என். கொடகந்த
பணிப்பாளர் தலைமை அதிபதி
முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

திரு. உபாலி கிரிதிகொட
உறுப்பினர்

மத்திய கலாசார நிதியத்தின் பணியாட் தொகுதி

1980ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க மத்திய கலாசார நிதியத்தின் சட்டத்தின் பிரகாரம், கலாசார அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் மத்திய கலாசார நிதியத்தின் பிரதம நிருவாக உத்தியோகத்தராக பணியாற்றுகிறார். நிறுவனத்தின் தலைவராக பணிப்பாளர் தலைமை அதிபதி கடமையாற்றுவதுடன், மத்திய கலாசார நிதியத்தின் முழுமொத்த செயற்பொறுப்புக்களும் அபிவிருத்தி, நிருவாகம் மற்றும் நிதி எனும் பிரதான மூன்று பிரிவுகளின் கீழ் விடயத்திற்குப் பொறுப்பான மூன்று பணிப்பாளர்களால் முன்னெடுக்கப்படுகின்றது.

இச்செயற்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக ஆண்டினுள் கீழ்வரும் பணியாட் தொகுதியினர் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

முகாமைத்துவ நிலை உத்தியோகத்தர்கள்	11
கனிஷ்ட முகாமைத்துவ நிலை உத்தியோகத்தர்கள்	34
தொல்பொருளியல் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்	60
காப்பீட்டு உத்தியோகத்தர்கள்	47
சுவரோவிய காப்பீட்டாளர்கள்	21
எழுதுவினைஞர்கள் மற்றும் சமதரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்	218
தொழிலாளர் தர ஊழியர்கள்	1499
அமய அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்கள்	172
	2062

மத்திய கலாச்சார நிதியம்

நோக்கு

" எதிர்கால சந்தியினருக்காக இலங்கையின் தொன்மையான சீர்மையை பேணிப் பாதுகாத்தல் "

புணி

தேசிய மற்றும் சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் எமது கலாசார மரபுரிமைகளை பேணிப் பாதுகாத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்துவதன் மூலம் இலங்கையின் சமூக, கலாசார மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களித்தல்.

நோக்கம்

இலங்கையின் கலாசார மற்றும் மதச் சின்னங்களை அபிவிருத்தி செய்தல், பேணிப்பாதுகாத்தல், அகழ்வுப் பணிகளுக்காக நிதியளித்தல் மற்றும் வெளிநாடுகளிலும் இலங்கையிலும் மத மற்றம் கலாசார அபிவிருத்திக்காக ஏற்றுள்ள செலவுகளை ஈடுசெய்தலும், கலைஞர்கள், சிற்பக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், இசைக் கலைஞர்கள் மற்றும் கலாச்சார மேம்பாட்டுப் பணியில் ஈடுபட்டுள்ள ஏனைய நபர்களுக்கு நிதிஉதவி வழங்குதலும் அத்துடன் கலாசார மற்றும் மதத் துறைகளில் தேசத்துக்காக பணியாற்றியவர்களுக்கு வெகுமதிகளை வழங்குதலும் மேலும், அதற்கு ஏற்பான அல்லது விளைவாந்தன்மையுடைய ஏதுக்களுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளலும்.

மத்திய கலாச்சார நிதியத்தின் பிரதான கருத்திட்டங்கள்

01. அபயகிரி கருத்திட்டம்
02. ஜேதவன கருத்திட்டம்
03. பொலன்னறுவை கருத்திட்டம்
04. சீகிரியா கருத்திட்டம்
05. கண்டி கருத்திட்டம்
06. ரம்பா விகாரை கருத்திட்டம்
07. திஸ்ஸமஹாராமை கருத்திட்டம்
08. காலி கோட்டை கருத்திட்டம்
09. யாப்பகுவ கருத்திட்டம்
10. தம்பதெனிய கருத்திட்டம்
11. பண்டுவஸ்நுவர கருத்திட்டம்
12. ரிதீ விகாரை கருத்திட்டம்

விஷேட கருத்திட்டங்கள்

01. படலீய தொல்பொருள் சாதன மாதிரிப் பாடசாலை
02. வெளியீடு, அச்சிடல் மற்றும் விளம்பரப் பிரிவு
03. சமுத்திர தொல்பொருளியல் அருங்காட்சியகம், காலி
04. சமுத்திர தொல்பொருளியல் பிரிவு, காலி

வருடாந்த அறிக்கை 2011

நீண்ட ஒரு காலத்துக்குப் பின்னர் 2011 மகிழ்ச்சிகரமானதொரு பௌதீக தேர்ச்சியை எட்டிய ஒரு ஆண்டாகக் காணப்படுகின்றது. 2010 ஆம் ஆண்டு முதல் நிதி நிலைமை சாதகமாகக் காணப்படினும், பௌதீக வள முகாமைத்துவத்துடன் இணைந்த வகையில் இலக்குகளை எய்துவதை நோக்காகக் கொண்ட ஒரு அபிவிருத்தித் திட்டத்தை, உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான இயலுமை 2011 ஆம் ஆண்டிலே கைகூடியது.

இதன் பிரகாரம் 2011ஆம் ஆண்டில் 9பிரதான கருத்திட்டங்களின் கீழ் 141 வேலைத்தளங்கள் தொழிற்பட்டதுடன், இதில் 21 பூர்த்தி செய்யப்பட்டமை முக்கியமானதாகும். ஆண்டுக்கான நேரடிச் செலவாக ரூ359.6 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தபோதும், இதில் ரூ.220.1 மில்லியன் (61.2%) செலவிடப்பட்டிருந்தது. 198,855 மனித நாட்களில் 104,889.51 வேலை அலகுகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் இது ஏனைய ஆண்டுகளை விட 65.88% மிகத் தெளிவானதொரு தேர்ச்சியைக் காட்டுகின்றது. வருடம் பூராவுமான வினைத்திறன் 88% ஆகும்.

அபயகிரி கருத்திட்டம்

தொல்பொருளியல் அகழ்வும் ஆராய்ச்சிகளும்:

இதன் கீழ் தூபாராமை தொகுதியின் தென்பகுதி சுற்றுமதில், தூபாராமையின் போதி மரத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள வேலி, தூபாராமையின் கிழக்குத் திசையில் அமைந்துள்ள உட்பிரவேச வாயில் மற்றும் சந்திரவட்டக்கல் ஆகியவற்றுக்கு அண்மித்த அகழ்வுப்பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. மேலும் தூபாராமையின் நிலகாட்சிகளுக்காக அகழ்வுகளும், குட்டம் பொகுணைக்கு அருகாமையில் அமைந்துள்ள பழைய கட்டிடங்கள் மற்றும் மகாவிகாரையின் சின்னங்கள் பற்றிய அறிக்கையிடலும் மேற்கொள்ளப்பட்டது. தினசரி தொழிற்பட வேண்டிய அருங்காட்சியகம், ஆய்வுகளும் வெளியீடுகளும், ஆய்வு கூடம் ஆகியன வருடம் முழுவதும் தொடர்ச்சியாக இயங்கி வந்தன. வருட இறுதியில் 68.7% பௌதீகச் தேர்ச்சி எய்தப்பட்டுள்ளதுடன், ரூ7.35 மில்லியன் (64.8%) செலவழிக்கப்பட்டுள்ளது.

காப்பீடும் நிலக்காட்சியும்

அபயகிரி தூபியின் காப்பீட்டுப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. கூரை முகட்டு ஒப்பனை முழுமையாக பூர்தி செய்யப்பட்டுள்ளதுடன், சதுர வடிவான அணையின் பணிகளில் சிறுபகுதி எஞ்சியுள்ளது. சதுர வடிவான அணையின் காப்பீட்டுப் பணிகள் நிறைவடைந்ததும் தூபி உள்ளிட்ட அணையினதும் படியடுக்குத் தளமேடையினதும் காப்பீட்டுப்

பணிகளை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டபோதும், ஒக்தோம்பர் மாதத்திலேயே படியடுக்குத் தளமேடையின் காப்பீட்டுப் பணிகளை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக் கிட்டியது. அபயகிரி தாதுா கோபுரப் பீடத்தின் புனரமைப்புப் பணிகள் விரைவாக முன்னெடுக்கப்படுவதுடன், வருட இறுதியில் 80% பணிகளை பூர்த்தி செய்ய முடிந்தது. இப்பணிகள் 2012ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

தூபியின் வேலைத்தளங்களுக்கு மேலதிகமாக தூபாராமை தொகுதியின் வெளிப்புற மதிலை பாதுகாப்பதற்கும் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வருட இறுதியில் அணையின் செங்கல் வேலைகள் மாத்திரம் எஞ்சிக் காணப்படுவதுடன், செங்கற்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்படாதிருந்திருப்பின், இப்பணிகளையும் பூர்த்தி செய்திருக்கலாம். தூபாராமையின் போதி மரத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள வேலியின் காப்பீட்டுப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன.

அபயகிரி மற்றும் மஹாவிகாரை வளாகத்தின் பாராமரிப்புப் பணிகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன.

ஜேதவன கருத்திட்டம்

தொல்பொருளியல் அகழ்வும் ஆராய்ச்சிகளும்:

இதன் கீழ் விஞ்ஞான ரீதியானதும் ஆய்வுரீதியானதுமான பகுப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புராதன மனித வாழ்விடங்கள் தொடர்பில் ஆய்வு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முதலாம் கட்ட அகழ்வுப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இதற்கான அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது. தொல்பொருளியல் ஆய்வுகள், தரவு சேகரித்தல், ஆய்வுகூடம், தொல்பொருள் பகுப்பாய்வு ஆகிய நாளாந்த நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக நடைபெற்றன. தொல்பொருளியல் வருடாந்த அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டது.

காப்பீடும் நிலக்காட்சியும்

புராதன ஆராமைகளின் புனர்நிர்மாணப் பணிகள் முதன்மையாக இடம்பெறுவதுடன், கருத்திட்ட அருங்காட்சியகம் உள்ளிட்ட சில கட்டிடங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டன. ஜேதவன தூபியின் பாதுகாப்பு கருதி கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த, சதுர வடிவான அணையின் கீழ் பகுதியை நோக்கியதாக சுமார் 5 மீற்றர் தூரத்துக்கு சாந்துக்கலவை இடும் பணியும் முன்னெடுக்கப்பட்டது.

மேலும், பொற்கம்பி நிதியங்கள் மூலம் மஹா போதியைச் சூழ எராளமான மேம்படுத்தல்கள் முன்னெடுக்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டதுடன், பழைய கல் அணையின் காப்பீட்டுப் பணிகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. 2012இல் பூர்த்தி செய்யப்படவேண்டிய இப்பணிகளில் அரைவாசிக்கும் மேல் தற்போது நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

மேலும், கருத்திட்ட நிலப்பிரதேசத்தின் பாராமரிப்பு பணிகள் வருடம் முழுதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. அபயகிரி தூபியின் காப்பீட்டு நடவடிக்கைகளுக்கு தொழிலாளர்களை ஈடுபடுத்துவதில் ஏற்பட்ட தாமதம் கருத்திட்ட செயற்பாடுகள் தாமதமாவதற்கு காரணமாயமைந்தன.

பொலன்னறுவைக் கருத்திட்டம்

தொல்பொருளியல் அகழ்வும் ஆராய்ச்சிகளும்:

பிரதானமாக ஆய்வுரீதியிலான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. தொல்பொருளியல் அகழ்வுகளின்போது கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள், கல்வெட்டுக்கள் மற்றும் துபாபாராமை அழிவுச் சின்னங்களை ஆய்வு செய்து, இலங்கையின் மத்திய கால வரலாறு பற்றிய அறிவு இற்றைப்படுத்தப்படுகின்றது. அருங்காட்சியகம், நூலகம், ஆய்வுகூடம் மற்றும் மாதாந்த விரிவுரைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

காப்பீடும் நிலக்காட்சியும்

கிரிவெகரை பாகாப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதுடன், 2011 நவம்பா் மாதம் இப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன. நீண்ட ஒரு காலப்பகுதிக்குப் பின்னர், தொல்பொருளியல் பெறுமதி வாய்ந்த விசாலமான ஒரு தூபிக்கு வெள்ளைச் சுண்ணாம்பு பூசப்பட்டு புனரமைப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட முதலாவது தடவை இதுவாகும். குறித்த காப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இவை எதிர்வரும் வருடத்தில் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

சுற்றுலாத் துறைக்கான வசதிகளும் 2011ஆம் ஆண்டில் விருத்தி செய்யப்பட்டன. இதன் கீழ் தொல்பொருளியல் நிலப்பிரதேசத்தினுள் வீதிகளில் செங்கல் பதித்தல், வாகனத் தரிப்பிடத்தை மேம்படுத்துதல், வர்த்தகக் கூடங்களை முறையாக நிர்மாணித்தல், ஆதித்ய சுற்றுலா விடுதி மேம்படுத்தல் ஆகியன நடைபெற்றன. ஏற்கனவே, உத்தேசிக்கப்பட்டதன் பிரகாரம் வீதிகளில் செங்கல் பதித்தல் ஆய்வு மட்டத்தில் 1 கிலோமீற்றர் தூரத்துக்கு மேற்கொள்ளப்பட்டதுடன், பிரயோகரீதியான காரணங்களுக்காக குறித்த வீதிகளில் கபில நிற கொங்கிறீட் கற்களை பதிப்பதற்கு வருட இறுதியில் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், லங்காதிலக்க சிலைக்கூடம் மற்றும் விஜயபாகு மாளிகையின் ஆதிகால சாந்து பராமரிப்பு, தொல்பொருளியல் நிலப்பிரதேசத்தின் பாராமரிப்பு மற்றும் பூங்காவின் அலங்கார பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

சீகிரி தம்புள்ளை கருத்திட்டம்

தொல்பொருளியல் அகழ்வும் ஆராய்ச்சிகளும்:

தொல்பொருளியல் பாதுகாப்புப் பிரதேசத்தின் வடகிழக்குப் பிரதேசத்தை வரைபடமாக்கும் நடவடிக்கைகளும் தீபக்கல்(பஹுன் கல) அண்மித்த பிரதேசத்தின் முதற்கட்ட ஆராய்ச்சிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், கலவெல்ல உல்பொத்தையின் ஆராய்ச்சிகளும் முதற்கட்ட அகழ்வுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. கருத்திட்டத்தின் அகழ்வு பணிகளில் தொல்பொருள், கல்வெட்டு மற்றும் ஓவிய ஆய்வு, அறிக்கையிடல், பகுப்பாய்வு, தொல்பொருள் தரவுகளை களஞ்சியப்படுத்தல், புதிய அருங்காட்சியகத்தின் தொல்பொருள் கண்காட்சி, பார்வையாளர்களை அறிவுறுத்தல், விரிவுரைகள் மற்றும் தொல்பொருள் ஒழுங்கமைப்பு ஆகிய நாளாந்த செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. நூலகத்தின் மக்கள் தொடர்புகளின் கீழ் உல்லாசப்பயணிகளை கவரும் முகமாக இலங்கையின் பழமைவாய்ந்த ஒரு போர்க் கலையான அங்கம் பொர வெளியரங்குக் கண்காட்சியும் ஓகஸ்ட் மாதத்தில் இடம்பெற்றது.

காப்பீடும் நிலக்காட்சியும்

கண்ணாடிச் சுவரின் ஆதிகால சாந்து பராமரிப்புப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. சீகிரிக் குன்றின் உச்சியில் தெற்கு மற்றும் கிழக்குத் திசை சுற்றுமதில், சிங்க பாத படியடுக்குத் தளமேடையின் கிழக்கு மற்றும் மேற்கு நிலைகளின் புனரமைப்புப் பணிகள் செப்டெம்பர் மாதம் வரை முன்னெடுக்கப்பட்டபோதும், செங்கல் மற்றும் புனரமைப்புக்குத் தேவையான பொருட்களை மேலே ஏற்றிச் செல்வதில் ஏற்பட்ட சிரமம் காரணமாக இடைநிறுத்தப்பட்டது. ஆனால், சிரமதானம் மூலம் ஒக்டோம்பர் மாதம் முதல் தேவையான பொருட்கள் மலை உச்சிக்கு ஏற்றிச் செல்லப்பட்டதுடன், மீண்டும் காப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பூங்காவின் காட்சிப்படுத்தல் பணிகளும் நீர்த்தடாகங்களினாலான பூங்காக்களின் பழைய சுற்றுமதில்களின் பராமரிப்புப் பணிகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன. நீர்த்தடாகங்களினாலான பூங்காக்களின் தென்மேற்குத் திசையில் அமைந்துள்ள பொய்கைகளின் காப்பீட்டுப் பணிகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. சூழல் நடமாட்டம் மற்றும் உல்லாசப் பயணிகளைக் கவரும்நோக்கில் அப்சரா தொகுதியை புனர்நிர்மாணம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், இதற்கான கட்டிடக் கலை திட்டங்கள் தற்போது திட்டமிடப்படுகின்றன.

தம்புள்ளை வேலைத்தளம்

தபவ மற்றும் மஹவெகெர விகாரைகளின் சித்திரங்களைப் பாதுகாக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தலகிரியாகமை சித்திரங்களின் காப்பீட்டுப் பணிகளும் இறுதிக் கட்டத்தை அண்மித்துள்ளன.

சுவரோவியங்கள் அருங்காட்சியகத்தின் பொதுமக்கள் கண்காட்சி, பராமரிப்பு ஆகிய நாளாந்த செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதுடன், காப்பீடு செய்யப்பட்ட சித்திரங்களின் தரப் பரிசோதனை மற்றும் ஒழுங்கமைப்பும் முன்னெடுக்கப்படுகின்றன.

கண்டி கருத்திட்டம்

தொல்பொருளியல் அகழ்வும் ஆராய்ச்சிகளும்:

தொல்பொருளியல் ஆய்வுகளின் கீழ், கண்டி பிரதேச செயலாளர் பிரிவின் மரபார்ந்த கலைகள் பற்றிய ஆய்வுகள் மற்றும் தேசிய சுவடிக்கூட திணைக்களத்திடம் காணப்படும் கண்டி புராதன சின்னங்கள் தொடர்பான ஆவணங்களைப் பரிசீலித்து, தரவுகள் சேகரிக்கப்பட்டு, பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட ஏனைய உல்லாசப் பயணிகளுக்கான அறிவுறுத்தல் மற்றும் விரிவுரைகள் வழங்கப்படுகின்றன.

காப்பீடும் நிலக்காட்சியும்

மகுலேதன்ன ரஜமஹா விகாரையின் போதனை மண்டபம் (பன மடுவ), சிலை மண்டபம் மற்றும் நூலகத்தின் காப்பீட்டுப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன. செல்லாவளி ரஜமஹா விகாரையின் உத்தேச பணிகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளபோதிலும், மேலதிகமாக சேர்க்கப்பட்ட சில பணிகள் மேலும் நடைபெறுகின்றன.

அத்தரகம ரஜமஹா விகாரையின் தூபியின் பக்கமாக வளைந்து வளர்ந்து நின்ற மரங்கள் அகற்றப்பட்டு சாந்து வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், விகாரையில் இடைக்கிடை மேற்கொள்ளப்பட்ட புனர்நிர்மாணப் பணிகளின்போது வெள்ளைச் சுண்ணாம்பு பூசப்பட்டு, மறைந்திருந்த பழைய வேலைப்பாடுகள் வெளிக்கொணரப்பட்டன. புளுகஹதன்ன ரஜமஹா விகாரையின் கூரைப் பகுதி தவிர எஞ்சிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன.

உலக மரபுரிமைகள் நகரத்தின் வரலாற்றுப் பெறுமதிமிக்க கட்டடக் கலையின் மாதிரிக்கு பங்கம் ஏற்படாத வகையில், கண்டி நகரின் புதிய கட்டிடங்களுக்கான உரிய திட்டங்களைத் தயாரித்தலும், பண்டைய வீதிகளின் தோற்றப்பாடு பற்றிய தகவல்களை வழங்குதலும் மேலும், மாற்றங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் அறிக்கையிடல் பணிகளும் உலக மரபுரிமைகள் பிரிவினால் வருடம் முழுவதும் செயற்படுத்தப்படுகின்றன.

கனேகெதர ரஜமஹா விகாரை, மணிக்ஹின்ன பொதுகல் விகாரை மற்றும் ரத்மலானை ஸ்ரீ புஷ்மாராமை ஆகிய விகாரைகளின் ஓவிய காப்பீட்டுப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. கந்தபிட்டிய டெம்பிட்ட விகாரையின் சித்திரங்கள் காப்பீடு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், காப்பீடு செய்யப்பட்ட சித்திரங்களைக் கொண்ட விகாரைகளை ஒழுங்கமைத்தல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது.

ரம்பா விகாரை கருத்திட்டம்

தொல்பொருளியல் அகழ்வும் ஆராய்ச்சிகளும்:

இதன் கீழ் ஆய்வுகளும் தொல்பொருள் பகுப்பாய்வும் முதன்மையாக மேற்கொள்ளப்படுவதுடன், 21ஆம் இலக்க ஆராமைத் தொகுதியின் நிலக்காட்சியை அமைப்பதற்காக மண் அகற்றப்பட்டது. தேவையான ஊழியர்களைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட சிரமம் காரணமாக பல உத்தேச வேலைத்தளங்களை ஆரம்பிக்க முடியவில்லை. தொல்பொருள் பகுப்பாய்வும் அறிக்கையிடலும் ஆய்வுகூடத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

காப்பீடும் நிலக்காட்சியும்

21ஆம் இலக்க தொகுதியின் வெளிப்புற சுற்று மதிலினதும் மற்றும் ஏனைய பழைய செங்கல் மதில்களினதும் காப்பீட்டுப் பணிகளின் பெரும்பகுதி பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. வெளிப்புற சுற்று மதிலின் சில பகுதிகள் தனியார் காணிகளின் ஊடாகச் செல்வதனால் கருத்திட்ட நிலப்பிரதேசத்துக்குச் சொந்தமான பகுதிகளில் மாத்திரம் அகழ்வு மற்றும் காப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. காப்பீட்டுப் பணிகளின் மீதிப் பகுதியை மேற்கொள்வதற்கு குறித்த காணி உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

ரம்பா விகாரைக்கு தேவையாகக் காணப்பட்ட தேரர்களுக்கான வதிவிடத்தை நிர்மாணிக்கும் பணிகள் நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டன. ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளபடுகின்ற இப்பணியானது பாரிய அணை வரையில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

கருத்திட்டத்தின் வசதி மேம்படுத்தலின் கீழ் மலசலகூடத் தொகுதியொன்றின் நிர்மாணிப்புப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டதுடன், வருட இறுதியில் 75% நிறைவு செய்யப்பட்டது.

திஸ்ஸமஹாராமை கருத்திட்டம்

தொல்பொருளியல் அகழ்வும் ஆராய்ச்சிகளும்:

பிரதேசத்தின் பண்டைய மனித வாழ்விடங்கள் தொடர்பில் அறிவினைப் பெற்றுக்கொள்ளும் முகமாக அதுருகொடையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள முதற்கட்ட அகழ்வுப் பணிகள் வருடம் முழுவதும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. தற்போது நில மட்டத்திலிருந்து சுமார் 6 மீற்றர் ஆழத்தில் நில கூற்றுக்களின் ஆய்வும் மாதிரி சேகரித்தலும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ள தொல்பொருட்களின் பகுப்பாய்வு, காப்பீடு மற்றும் ஆவணப்படுத்தல் ஆகியனவும் ஒழுங்கு முறையாக இடம்பெறுகின்றன.

காப்பீடும் நிலக்காட்சியும்

சந்தகிரி தூபியின் காப்பீட்டுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. 17 மீற்றர் உயரம் கொண்ட இந்த பழைய தூபியின் செங்கல் பாதுகாப்பு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. ஆனால், தூபியின் மேல் பகுதி தொடர்பில் உறுதியான ஒரு தீர்மானத்தை எய்துவதற்கு தொல்பொருள் ஆலோசனைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. பழைய குடையின் பகுதிகளை புனரமைப்புச் செய்து குடையைப் பொருத்துவதற்கு அல்லது தூபியின் உச்சி வரையில் மாத்திரம் காப்பீட்டு செய்வது தொடர்பிலான தீர்மானம் எதிர்பார்க்கப்படுகின்றது. தூபியின் உட்புற அணையினதும் மணலடுக்குத் தளமேடையினதும் காப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தூபியின் சுற்றுவட்டங்களை நிரப்பும் வேலைகள் முடிவடைந்ததன் பின்னர், தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் உட்புற அணையினதும் மணலடுக்குத் தளமேடையினதும் காப்பீட்டை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கதிர்காமம் அருங்காட்சியகத்தின் உல்லாசப்பயணிகள் விடுதியும் இந்தக் கருத்திட்டத்தின் கீழ் நிர்வாகிக்கப்படுகின்றது. கருத்திட்ட நிலப்பிரதேசத்தின் பராமரிப்புப் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன.

இந்த கருத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட மெத முலன போதி மளு விகாரையின் நான்கு பக்கத்திலும் அமைக்கப்பட்டுள்ள மலர்ப்பீடங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

காலிக் கோட்டை கருத்திட்டம்

தொல்பொருளியல் அகழ்வும் ஆராய்ச்சிகளும்:

இதன் கீழ் சமுத்திர தொல்பொருள் ஆய்வுகளும் தொல்பொருள் காப்பீடும் மேற்கொள்ளப்படுகின்றது. 2011ஆம் ஆண்டின் இரண்டாவது தவணையில் மத்திய கலாசார நிதியத்தின் சமுத்திர தொல்பொருளியல் பிரிவானது வடமேல் கடற்கரையிலும் ஆழமற்ற கடற்பிரதேசத்திலும் அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டது. இந்தப் பிரதேசத்தில் மூழ்கியுள்ள கப்பல்கள் தொடர்பில் ஆராய்வது நோக்கமாகவுள்ளது. மேலும், காலிக் கோட்டையின் .... (இலக்கங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்) வேலைத்தளங்களின் பிரதேசக் காப்பீடும் அகழ்வாராய்ச்சியும் முன்னெடுக்கப்படுகின்றன.

சமுத்திர தொல்பொருளியல் நூலகத்தின் நாளாந்த நடவடிக்கைகளும், மேலும், மாணவர்களுக்கான நிகழ்ச்சி மற்றும் கண்காட்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

வடமேல் கலாச்சார சதுக்கம்

வடமேல் சதுக்கத்தின் முதலாவது படிமுறையாக, யாப்பகுவ ஜனவரி மாதத்திலும் தம்பதெனிய ஜீலி மாதத்திலும், பண்டுவஸ்நுவர செம்டெம்பர் மாதத்திலும் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால், யாப்பகுவயைத் தவிர ஏனைய வேலைத்தளங்களுக்கு போதுமானளவு தொழிலாளர்களை பெற்றுக்கொள்ள முடியாமற் போனதன் காரணமாக அகழ்வு அல்லது காப்பீட்டுப் பணிகளை ஆரம்பிக்க முடியவில்லை.

யாப்பகுவ வேலைத்தளம்

தொல்பொருளியல் அகழ்வும் ஆராய்ச்சிகளும்:

பங்கலாப்பிட்டிய தூபியின் முதற்கட்ட அகழ்வுப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன. இதனுடன் இணைந்ததாக பங்கலாப்பிட்டிய குளத்தினதும் வெளிப்புற நீரகழியினதும் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதில் பயிற்சி பெறும் தொல்பொருளியல் பட்டதாரிகளின் நேரடியான பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது. மழை காரணமாக குளத்தின் அகழ்வுப் பணிகளை நவம்பர் மாதம் இடைநிறுத்த வேண்டி நேர்ந்தது.

காப்பீடும் நிலக்காட்சியும்

குன்றின் உச்சிக்கு பிரவேசிக்கும் கல்லாலான படிக்கட்டின் காப்பீடு 75% பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. கய்காவெல ரஜமஹா விகாரை அணையின் சிறிய பகுதியின் வேலையே எஞ்சியுள்ளது.

படலீய தொல்பொருள் சாதன மாதிரி விடுதி மற்றும் பாடசாலை

படலீயவில் அமைந்துள்ள தொல்பொருள் சாதன மாதிரி பாடசாலையானது, தொல்பொருளியல் திணைக்களமும் மத்திய கலாசார நிதியமும் தமது அகழ்வாராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கும் மற்றும் ஏற்கனவே கண்டுபிடித்த, சிறந்த கலைப் படைப்புக்களினதும் தொல்பொருள் சாதனங்களினதும் மாதிரியுருக்களை தரமான அளவில் வடிவமைத்து சந்தைப்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இந்த நிறுவனம் சித்திரம், சிற்பம் மற்றும் செதுக்கற் கலை தொடர்பான வருட பாடநெறிகளை நடாத்தி வருவதோடு, இதில் கருங்கல், களிமண், சீனக்களி, அரிமரங்கள் மற்றும் பைபர் போன்ற பொருட்களின் பயன்பாட்டுடன் தொடர்புபடும் பாடநெறிகளைப் பயிலும் மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படுவதுடன், அவர்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்களுக்கான ஊக்குவிப்பும் வழங்கப்படுகின்றது.

2009/2011 கல்வி ஆண்டுக்கான குறித்த பாடநெறிகளைப் பயின்ற மாணவர்களுக்கு ஓகஸ்ட் மாதம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதனுடன் இணைந்ததாக இம்மாணவர்களின் புதிய படைப்புகள் மற்றும் மாதிரி படைப்புகளை உள்ளடக்கிய கண்காட்சியும் நடத்தப்பட்டது.

2011ஆம் ஆண்டின் விஷேட பணிகள்

- கண்டி சர்வதேச பௌத்த நூலகத்தின் இலங்கை கூடத்துக்கான சகல மாதிரிச் சிலைகளையும் அமைத்தல்
- பொறியியல், ஆராய்ச்சி நிறுவனத்தினால் கொள்வனவுக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட கலிங்கல் தொட்டியின் குறுக்கு வெட்டு மாதிரியை நிர்மாணித்து தேசிய நூலகத்துக்கு ஒப்படைத்தல்.
- பொரள்ளை விகாரையின் புதிய பௌத்த சிலை வைக்கப்பட்டிருக்கும் கூடத்தில் சித்திரங்களை வரைதல்
- காலி ரிச்மண்ட் கல்லூரியில் இதுவரையில் பணியாற்றிய 10 அதிபர்களின் மார்பளவு உருவச் சிலைகளை அமைத்தல்.
- ஜனாதிபதிக்கு சார்க் மாநாட்டில் பங்கேற்கையில் எடுத்துச் செல்லத் தேவைப்பட்ட பொலன்னறுவை நிஸ்ஸங்கமல்ல கொலுமண்டபத்தின் சிங்கத்தின் சிலையை அதே அளவில் நிர்மாணித்தல்.

2011 ஆம் ஆண்டு மாதிரிச் சிலை விற்பனையினால் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ரூ5.5 மில்லியனாகும்.

தாமரைத் தடாகம் கலையரங்கு

மத்திய கலாச்சார நிதியத்தினால் பாரிய பங்களிப்பு வழங்கப்பட்ட தாமரைத் தடாகம் மஹிந்த ராஜபக்ஷ கலையரங்கானது நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு, இந்த வருடம் டிசெம்பர் மாதம் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. சகல நவீன நடனமண்டப வசதிகளையும் கொண்ட இந்த கலையரங்கானது 1288பேருக்கான ஆசன வசதிகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

வெளியீட்டுப் பிரிவும் அச்சகமும்

மத்திய கலாச்சார நிதியத்தின் வெளியீட்டுப் பிரிவினால் வருடம்தோறும் பல்வேறுபட்ட பிரசுரங்கள், துண்டுப்பிரசுரங்கள், வழிகாட்டல் வரைபடங்கள், வருடாந்த ஆராய்ச்சிகள் பற்றிய புத்தகங்கள் மற்றும் பல சிறுவர் இலக்கிய நூல்கள் வெளியிடப்பட்டன. மேலும், கையிறுப்பு முடிவடைந்த சகல வெளியீடுகளும் நிதியத்தின் அலுவலக தேவைக்கான கடிதத் தலைப்புகள் உள்ளிட்ட எழுது கருவிகளும் அச்சிடப்படுகின்றன. நிதியத்தின் வெளி எழுத்தாளர்களால் ஆக்கப்பெற்ற இலக்கிய, கலாச்சார மற்றும் பாரம்பரிய கட்புலனாகா மரபுரிமைகள் பற்றிய நூல்களும் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

2011 ஆம் ஆண்டு அச்சகத்தினால் நிதியத்தின் 53 வெளியீடுகளும் வெளி நிறுவனங்களுக்காக 30 வெளியீடுகளும் அச்சிடப்பட்டன். அச்சகத்துக்காக ஏற்பட்ட வருடாந்த செலவு ரூ4.2 மில்லியனாகக் காணப்படுவதுடன், மொத்த வருமானம் ரூ5.4 மில்லியனாகும்.

இவ்வருடத்திற்கான வெளியீடுகளின் விற்பனை வருமானம் ரூ9.77 மில்லியனாகும்.

பௌதீக முன்னேற்றம்

மத்திய கலாசார நிதியத்தைத் தாபிப்பதன் ஒரு முக்கிய குறிக்கோள் இலங்கையிலுள்ள தொல்பொருடகளை அபிவிருத்தி செய்து பாதுகாப்பதாகும். இதன் கீழ் அபயகிரி, ஜேதவன தூபிகளை பாதுகாப்பதற்கான பணிகள் மிக முக்கியமானதும், பாரியளவில் நிதி செலவிடப்பட்டதுமான கருத்திட்டங்களாகும். மத்திய கலாசார நிதியத்தினால் தற்போது ஆரம்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்ற கருத்திட்டங்கள பின்வருமாறாகும்.

- அபயகிரி
- ஜேதவன
- சீகிரிய
- பொலன்னறுவை
- கண்டி
- வடமேல் கலாசார சதுக்கக் கருத்திட்டம் (யாப்பகுவ, தம்பதெனி, பண்டுவஸ்நுவர, குருநாகல்)
- ருகுணு கலாசார வலயம்

நாம் மேற்கொள்ளும் ஆராய்ச்சி நடவடிக்கைகள், அகழ்வுகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கென ஊழியர்கள் சுமார் 2100 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்பதுடன், அவர்களின் மாதாந்த சம்பளம், வேதனத்தைச் செலுத்தவென சுமார் 50 மில்லியன் ரூபாவை நாம் செலவிடுகின்றோம்.

ஜேதவன தூபியை பாதுகாப்பதற்கான நடவடிக்கைககள் 2009 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டதுடன், அபயகிரி தூபியை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் இதுவரை சுமார் 98% பூர்த்தியடைந்துள்ளன. 2013 மே மாதஇறுதிக்குள் தூபியை பாதுகாப்பதற்கான பணிகளை பூரணமாக நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக வடமேல் கலாசார சதுக்கத்தின் கீழ் யாப்பகுவ, தம்பதெனிய, பண்டுவஸ்நுவர, குருநாகல் ஆகிய கருத்திட்ட அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டு அகழ்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் ருகுணு கலாசார அபிவிருத்தி மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக்காக சந்தகிரி தூபியை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், ஏனைய பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக

ருகுணு கலாசார வலயத்தை ஆரம்பிக்க நிர்வாக சபையின் அங்கீகாரமும் தற்போது பெறப்பட்டுள்ளது.

அத்துடன் சீகிரிய, பொலன்னறுவை கருத்திட்டங்களில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துவதற்காக வீதிக் கட்டமைப்பு, மின்சாரக் கட்டமைப்பு, நீர் விநியோகக் கட்டமைப்பு ஆகியவற்றை ஒழுங்கமைக்கும் பணிகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் இந்த ஆண்டின் இறுதிக்குள் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. சித்திரம் மற்றும் நினைவுச்சின்னங்கள் ஆகியன இவற்றில் முக்கியமானவையாவும். அகழ்வுப் பணிகள் குறைக்கப்பட்டுள்ளதுடன், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான அகழ்வுகளின் மூலம் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களை பயிற்றுவிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. நூதனசாலை அபிவிருத்தி மற்றும் சுற்றுப் பயணிகளுக்கான வழிகாட்டல் பலகைகள் மற்றும் ஏனைய முறைகளை மென்மேலும் அறிமுகம் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தொல்பொருள் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குச் செலவாகும் நிதிக்கான வருமான மூலங்கள்

மத்திய கலாசார நிதியத்தின் முக்கியமான வருமான மூலங்களாக இருப்பது சீகிரிய, பொலன்னறுவை, அநுராதபுரம் ஆகிய கருத்திட்டங்களை பார்வையிட வருகை தருகின்ற சுற்றுப் பயணிகளிடமிருந்து அறவிடப்படுகின்ற நுழைவுச் சீட்டுக் கட்டண வருமானமாகும். இந்த நுழைவுச் சீட்டு விற்பனை மூலம் கடந்த காலங்களில் பெற்றுக் கொண்ட வருமானம் பின்வருமாறாகும்.

ஆண்டு	வருமானம் (ரூபா)	வளர்ச்சி %
2009	422,901,847	-
2010	764,622,361	81
2011	1,027,218,619	34

இதற்கமைய 2011 ஆம் ஆண்டு நுழைவுச் சீட்டு விற்பனை மூலமான வருமானம் ரூபா 1,027,218,619/= ஆக வளர்ச்சியடைந்துள்ளதுடன், இது 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 143% இனாலும், 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 34% இனாலும் வளர்ச்சியடைந்துள்ளதை வெளிப்படுத்துகின்றது. இவ்வாறு எமது வருமானம் அதிகரிப்பதற்கான

முக்கிய காரணம் 2009 ஆம் ஆண்டின் இறுதியில் எமது நாட்டில் நிலவிய யுத்த சூழல் நிறைவடைந்து நாட்டுக்கு சுற்றுப் பயணிகளின் வருகை 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பின்வருமாறு அதிகரித்தமையாகும்.

ஆண்டு	சுற்றுப் பயணிகளின் வருகை
2009	422,890
2010	654,476
2011	855,955

இதற்கமைய 2011 ஆம் ஆண்டில் சுற்றுப் பயணிகள் 855,955 பேர் இலங்கைக்கு வருகை தந்துள்ளதுடன் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது இரு மடங்கு வளர்ச்சியாகும். இந்த சுற்றுப் பயணிகளின் அதிகரிப்பு மற்றும் எமது வருமானத்தின் அதிகரிப்பை கவனத்தில் கொள்ளும் போது 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டு வருமானம் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. இந்நிலைமையை மேலும் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அவ்வவ் மாதங்களில் நுழைவுச் சீட்டுகளின் விற்பனை மூலமான வருமான அதிகரிப்பு எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதை விபரிக்கின்ற பின்வரும் வரைபை அவதானிக்கலாம்.

இதற்கமைய 2011 ஆம் ஆண்டில் நுழைவுச் சீட்டு விற்பனை வருமானம் 800 மில். ரூபாவென மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் அதற்கும் அப்பால் சென்று 1,027 மில்லியன் ரூபாவை நுழைவுச் சீட்டு விற்பனை வருமானமாக உழைத்துக் கொள்ளும் வாய்ப்பு எமது நிறுவனத்திற்குக் கிடைத்துள்ளது.

இந்த ஆண்டின் நிதிப் பெறுபேறுகள் பற்றி கவனத்தில் கொள்ளும் போது இது ரூபா 235,009,985 ஆன மிகையை வெளிப்படுத்துவதுடன், இது 2009 ஆம் ஆண்டில் ரூபா 99,897,209 ஆன பாதகமான நிதிப் பெறுபேறாக இருந்த நிலைமையை மாற்றியமைத்து சாதகமான நிதிப் பெறுபேறை அடைந்து கொள்ளும் வாய்ப்பை நிறுவனத்திற்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளதுடன், இதனால் நிதி நடவடிக்கைகள் வெற்றிகரமாக வழிநடாத்தப்பட்டுள்ளன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதிதிணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය எனது இல My No — ரீஎம்/ஏ/சீசீஎப்/2011/ எப்ஏ/2011/01	ඔබේ අංකය உமது இல Your No.	දිනය திகதி Date — 2013 சனவரி 13

பணிப்பாளர் நாயகம்,
மத்திய கலாசார நிதியம்

மத்திய கலாசார நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் 9(4) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மத்திய கலாசார நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் 9(4) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்வதன் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ள என்னால் முடியாதுள்ளேன்.

1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல்கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நிர்ணயிக்க என்னால் முடியாதுள்ளேன்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டுக் நியமங்களுடன் (இ.க.நி.) இணங்காமை

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கீழே காட்டப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டுக் நியமங்களுடன் (இ.க.நி.) இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

இலங்கை கணக்கீட்டுக் நியமங்களுடனான தொடர்பு	இணங்காமை
(அ) இ.க.நி. 3	(i) நிதிக் கூற்றுக்களுக்காக கட்டுப்பாட்டுச் சபையின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. (ii) நிதிக்கூற்றுக்களில் முன்னைய காலப் பகுதிகளின் ஒப்பிடக்கூடிய வகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காசுப் பாய்ச்சல் கூற்றில் அதே மாதிரியில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
(அ) இ.க.நி. 18	(i) அண்ணளவாக ரூபா 82.50 மில்லியன் கூட்டுத்தொகையான கணக்கிடக்கூடிய காணி மற்றும் கட்டிட விடயங்கள் 3 இன் நியாயமான பெறுமதி நிச்சயிக்கப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (ii) ரூபா 8,173,900 காப்புறுதிப் பெறுமதியுடைய 21 வாகனங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. (iii) பெறுமானத் தேய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ள ரூபா 138,538,297 பெறுமதியான இயந்திரங்களையும் உபகரணங்களையும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும்

பாவனைக்கு எடுக்க முடியாத சொத்துக்களை கைதவிர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(iv) ரூபா 21,422,365 பெறுமதியான தளபாடங்கள் பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கணனி மற்றும் உதிரிப்பாகங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் ஒப்பந்த உபகரணங்கள் என்பன பெறுமானத் தேய்வு செய்யப்பட்டி ருக்கவில்லை.

2.2.2 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அறவிடமுடியாக்கடன் ஒதுக்கீடு தொடர்பான நிறுவனம் பின்பற்றியிருந்த கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன், முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடான ரூபா 3,756,339 தொகையே இவ்வாண்டிலும் அறவிடமுடியாக்கடன் ஏற்பாடாக கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட கடன்பட்டோரிடம் கழிப்பதற்குப் பதிலாக கிடைக்க வேண்டிய மீதிகளிலிருந்து கழித்து ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நானாவித வைப்பாக 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் பேணப்பட்டு வந்த ரூபா 3,461,463 ஐ வருமானத்திற்கு எடுப்பது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(இ) விசேட நிதியச் செயற்திட்டமாக நடைமுறைப்பொறுப்பின் கீழ் 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 18,426,279 முன்னைய ஆண்டின் சீராக்கத்தின் மூலம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்தமை மற்றும் ரூபா 4,537,224 ஏனைய வருமானமாக ஆண்டின் வருமானத்திற்கு செலவு வைத்தமை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டி ருக்கவில்லை.

(ஈ) வெளிநாட்டு மானியங்களின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சீகிரிய நூதனசாலை மூலதனமாக்கப்பட்டு அதற்காக மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத் தேய்வு ஒதுக்கீடான ரூபா 20,122,329 தொகை வருமானச் செலவுக் கணக்கினூடாக சீராக்கம் செய்யப்படாது வெளிநாட்டு வளங்கள் நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு உரிய சொத்துக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) தனியார் கம்பனியொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,382,055 முற்பணத்தை அறவிடுவதற்காக தொடரப்பட்டிருந்த வழக்கை முடிவுறுத்தி ரூபா 4,472,151 தொகையை மத்திய கலாசார நிதியத்திற்கு செலுத்துமாறு 2011 யூன் 30 ஆம் திகதி நீதிமன்றத்தால் கட்டளையிடப் பட்டிருந்த போதும் 2012 ஒக்தோபர் 31 வரை அதனை அறவிட முடியாதிருந்தது. இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 8,500,000 பெறுமதியான வாகனமொன்று ரூபா 5,067,106 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 3,432,894 கணக்குகளில் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2 வெளிநாட்டு நிதிய செயற்திட்டங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,631,478 கூட்டுத்தொகையான பணத்தை 2011 ஆம் ஆண்டில் கிடைத்த நிதியத்திலிருந்து ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன், அப்பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளிநாட்டு நிதிய செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 15,610,824 மற்றும் வெளிநாட்டு நிதிய செயற்திட்டத்தின் கீழ் ஆண்டில் செலவிடப்பட்ட ரூபா 36,823,600 செலவினம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்காததுடன், அதன் வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றை ஒன்றுகொன்று ஈடுசெய்யப்பட்டு மீதிகள் மட்டும் ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) ரூபா 17,946 ஆன தொங்கல் கணக்கின் மீதி நானாவிதக் கடன்பட்டோராக மீளாய்வாண்டின் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் என்பவற்றிற்கு வழங்கப்பட்டிருந்த 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நாட்பட்ட தீர்க்கப்படாத 28 மீதிகளுக்குரிய ரூபா 536,542 உம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 06 பழைய முற்பண மீதிகளுக்குரிய ரூபா 660,859 உம் 2012 ஒக்தோபர் 31 வரையிலும் தீர்க்கப்படாமல் தொடர்ந்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 28 நிரந்தர ஊழியர்களுக்குரிய அறவீடுகள் நிலுவையாக இருந்த ஊழியர் கடன் மீதிகளான ரூபா 1,257,003 கூட்டுத்தொகை 2011 திசெம்பர் 31 வரையில் 5 ஆண்டுகளுக்கு மேலாக நாட்பட்டிருந்ததுடன், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 366,721 ஆன இடர்கடன் மீதியொன்றும் தொடர்ந்தும் நிலுவையாக இருந்தன.

(இ) அறவிட முடியாதிருந்த 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நாட்பட்ட விழா மற்றும் விசேட முற்பணக் கடன் மீதி ரூபா 1,289,871 ஐ தொடர்ந்தும் அறவிடமுடியாமல் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2 – 28 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இருந்து வரும் ரூபா 1,658,005 கூட்டுத்தொகையான 16 கடன் மீதிகளும் 1 - 2 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலவீச்சில் இருந்து வரும் ரூபா 419,923 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகளையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை.

விடயம்	பெறுமதி	சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்
	ரூபா	
விசேட நிதிய மீதி	5,797,169	நிதியம் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட ஆவணங்கள்
தலைமை அலுவலகம் மற்றும் 10 பிரதேச செயற்திட்ட அலுவலகங்களின் வங்கி நடைமுறைக் கணக்கு மீதிகள்	2,400,324	6 கணக்குகளின் மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ்களும் அனைத்து மீதிகளின் காலப் பகுப்பாய்வும்
விசேட முற்பணம் மற்றும் விழா முற்பணம்	1,289,871	பட்டோலைகள்
செயற்திட்ட சொத்துக்கள்	21,422,365	பொருள் மெய்மையாய்வு அறிக்கை
ஊழியர் கடன் - இடர்	366,721	காலப்பகுப்பாய்வு
கடன்பட்டோர் மீதிகள் - 16	1,658,005	- மேற்படி -
தேசத்திற்கு மகுடம் செலவினம்	8,723,975	பற்றுச்சீட்டுக்கள், பட்டியல்கள், பொருளிருப்பு சான்றிதழ்கள், கேள்வி கோரல்கள், ஒப்பந்த உடன்படிக்கைகள்
காணி மற்றும் கட்டிடங்கள்	325,250,000	நிலையான சொத்துப் பதிவேடு

2.2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு	**இணங்காமை**
(அ) தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 11.9 ஆம் பிரிவு	ஆதனக் கடன் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களின் பொறுப்பளித்தல் உறுதி தமக்கு சமர்ப்பிக்கப்பட்ட உடனே திணைக்களத் தலைவரால் தத்துவத்தை

அளிக்கும் ஆவணங்களைப் பதிவு செய்து மீள அனுப்புவதற்காக உரிய மாவட்டத்தின் காணிப் பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டியதுடன், கடன்தொகை விடுவிக்கப்பட்டு 06 வாரங்களுக்குள் இந்நடைமுறை செயற்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் 78 உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்டு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 15,568,564 ஆன ஆதனக் கடன் மீதிளுக்குரிய அற்றோனித் தத்துவத்தை பதிவு செய்வதற்காக 2011 திசெம்பர் 31 வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

<u>நிதிப் பிரமாணம்</u>

371

2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்திற்காக முற்பணமாக மொனராகலை மாவட்ட செயலாளருக்கு ரூபா 4,981,905 உம் தனமல்வில மாவட்ட செயலாளருக்கு ரூபா 50,000 உம் நாடகக் கலைஞர் ஒருவருக்கு ரூபா 400,000 உம் வழங்கப்பட்டிருந்ததுடன், 2011 திசெம்பர் 31 வரையில் அம்முற்பணம் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

இது நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டமொன்றாக இருந்தமையால் அனைத்து வழங்கல் மற்றும் சேவைகள் பொதுத் திறைசேரியின் கொள்வனவுக் குழு மூலம் செய்யப்பட்டதாகவும் கணக்களி பொறுப்பும் அவர்களுடையதாகவும் அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ii) பிரதேச செயற்திட்டங்களின் செலவினங் களுக்காக 10 செயற்திட்ட அலுவலகங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,259,029 கூட்டுத்தொகையான துணைக் கட்டுநிதி மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ)	2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை மற்றும் 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தி	வருடாந்த கொள்வனவுத் தேவைப்பாட்டிற்காக நிறுவனத்தால் பிரதான கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். ஆகக் குறைந்தது 03 ஆண்டு காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவுகள் பிரதான கொள்வனவு திட்டத்தில் பட்டியலிடப்பட வேண்டிய போதும் நிறுவனத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ)	2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை	நிலையான சொத்துப் பதிவேடொன்றில் நிறுவனத்தின் கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.6 போதியளவில் அதிகாரம் பெறப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

அபயகிரி செயற்திட்ட வளவில் இருந்த 10550 ஸ்தூபி துண்டுக் கற்கள் செயற்திட்ட முகாமையாளரால் தமது சுயவிருப்பின் பேரில் வெளித்தரப்பினருக்கு இலவசமாக வழங்கப்பட்டிருந்தன. அத்துண்டுக் கற்களின் பெறுமதி ரூபா 2,008,500 ஆக இருந்தமை பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

2.2.8 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 3 முதல் 11 ஆண்டுகளில் கலாச்சார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சில் சேவைக்கு விடுவிக்கப்பட்டிருந்த மத்திய கலாசார நிதியத்தின் பதவியணிக்குரிய 6 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டில் நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்த அண்ணளவான சம்பளம் ரூபா 1,745,987 ஆக இருந்தது. அவ்வாறே 2007 ஆம் ஆண்டின் போது தென் மாகாணத்தின் நிறுவனமொன்றில் சேவை புரிவதற்காக விடுவிக்கப்பட்டிருந்த மத்திய கலாசார நிதியத்தின் 3 ஊழியர்களுக்கு 2011 ஆம் ஆண்டிற்காக நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்த சம்பளங்களின் கூட்டுத்தொகை ரூபா 644,675 ஆக இருந்தது.

(ஆ) நிதியத்தின் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 20,932,071 என நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களிலும் அப்பெறுமதி குறிப்பிடப்பட்டிருந்த போதும் அச்சொத்துக்களின் உரிமை நிதியத்தின் வசம் இல்லாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) சில கொள்வனவாளர்களுக்கு மொத்தமாக சுற்றுலா நுழைவுச்சீட்டுக்களை விற்பனை செய்யும் போது அவர்களிடம் காசோலைகளைப் பெற்றுக்கொள்ளல் அல்லது வங்கிக்கு நேரடியாக அப்பணத்தை செலவு வைத்தல் போன்ற பாதுகாப்பான முறைமைகள் பயன்படுத்தப்படாமல் அதிகளவிலான பெறுமதி பணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 30 ஆம் திகதியில் மட்டும் அவ்வாறு வழங்கப்பட்டிருந்த நுழைவுச்சீட்டுக்களின் பெறுமதி ரூபா 5,191,100 ஆக இருந்தது.

2.2.9 நோக்கத்திற்கு முரணான செயற்பாடுகள்

மீளாய்வாண்டில் நிதியத்தினால் தனது நோக்கத்திற்கு முரணான பின்வரும் செலவினங்களை மேற்கொண்டிருந்தது.

(அ) ஆதிவாசிகள் முகங்கொடுக்கும் சிக்கல்கள் மற்றும் அவர்களின் தேவைப்பாடுகளை ஆராய்வதற்காக 2011 பெப்ரவரி 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் அமைச்சரின் சுற்றுப்பயணம் மற்றும் 1,700 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகளைப் பகிர்ந்தளிப்பதற்கு ரூபா 1,777,307 செலவிடப்பட்டிருந்தன.

(ஆ) "கிராபத்துவென் தல் அருணட்ட – தல் அருணலு ருஹுணுபுரட" என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் பிரித் பராயணம் மற்றும் மிதிவண்டி சவாரிக்காக ரூபா 300,000 செலுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 235,009,985 மிகையாக இருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கான அதனோடு நேரொத்த மிகை ரூபா 207,471,070 உடன் ஒப்பிடும் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 27,538,915 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சுற்றுலா நுழைவுச்சீட்டுக்களின் விற்பனை வருமானம் ரூபா 262,596,258 ஆல் அதிகரித்திருந்த போதும் நிதியத்தின் செயற்பாட்டு செலவினமும் ரூபா 212,605,561 ஆல் அதிகரித்திருந்தமை மிகையில் அதிகரிப்பிற்கு போதியளவில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டில் வழங்கல் மற்றும் பயன்பாட்டுச் செலவின அதிகரிப்பு ரூபா 49.09 மில்லியன் அல்லது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நூற்றுக்கு 237% ஆக இருந்ததுடன், ஏனைய செலவினங்களின் அதிகரிப்பு ரூபா 50.41 மில்லியன் அதாவது சென்ற ஆண்டிற்கு ஒப்பாக 6788% ஆக இருந்தது. சம்பளம் மற்றும் வேதனங்கள் அதிகரிப்பு ரூபா 54.53 மில்லியன் அதாவது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 10% ஆக இருந்ததுடன், ஆதனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் பதிவழிப்புச் செலவினம் ரூபா 10 மில்லியன் அதாவது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 82% ஆல் அதிகரித்திருந்ததன் காரணமாக சுற்றுலா நுழைவுச்சீட்டுகள் விற்பனை வருமானம் ரூபா 262.59 மில்லியனால் அதாவது 34% அதிகரித்திருந்த போதும் செயற்பாட்டு மிகையில் போதியளிலான அதிகரிப்பு தொடர்பில் அது தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை.

04. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 56 அகழ்வு வேலைத்தளங்களும் 85 பாதுகாப்பு வேலைத்தளங்களுமாக மொத்தம் 141 வேலைத்தளங்களில் 159201 அலகு வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 19 வேலைத்தளங்களில் 104890 வேலை அலகுகள் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2011 இன் வேலைத்திட்டத்தின் பிரகாரம் ஜேதவன செயற்திட்டத்தில் அரசமரப் பாதுகாப்பு, பாதுகாப்பு அலுவலகத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் ஜேதவன அலுவலகத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல் என்பவற்றிற்காக ரூபா 2,342,251 கிரயத்திலான 291 வேலை அலகுகளைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், அச்செயற்பாடு வேலைத்திட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், அதற்கான காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(இ) அபயகிரி செயற்திட்டத்தில் பீடத்திற்கு கற்களைப் பரப்புதல், உள்ளே கூம்பகப் பாதுகாப்பு மற்றும் பெரிய விஹாரையின் பௌதீக ரீதியான பராமரிப்பிற்காக ரூபா 18,316,038 கிரயமான 7941 வேலை அலகுகளும் கண்டி செயற்திட்டத்தில் கந்தேபிட்டிய ரஜமஹா விஹாரையில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 725,085 கிரயத்திலான 172 வேலை அலகுகளும் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், ஆண்டின் போது இச்செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 07 செயற்திட்டங்களின் மொத்த மதிப்படப்பட்ட கிரயம் ரூபா 52,483,440 ஆன 18 வேலைத்தளங்களுக்காக 2011 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 19162 வேலை அலகுகளில் 2011 திசெம்பர் 31 இல் 1897 வேலை அலகுகள் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், அதன் நிதிசார் செயலாற்றல் ரூபா 5,195,780 ஆக இருந்தது. இதன் பிரகாரம் அச்செயற்திட்டங்களில் 2011 திசெம்பர் 31 இல் அடையப்பெற்றிருந்த பௌதீக மற்றும் நிதிசார் செயலாற்றல் 10% இற்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 409,064 கூட்டுத்தொகையான இடர் கடனைப் பெற்றுக்கொண்ட 24 உத்தியோகத்தர்கள் மத்திய கலாசார நிதியத்தின் சேவையிலிருந்து வெளியேறிச் சென்றிருந்ததுடன், அவர்களிடமிருந்து கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆதனக் கடன் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 407,719 ஆன கடன் மீதி 2005 ஆம் ஆண்டிலிருந்து காலாவதியாகியிருந்ததுடன், அக்கடன் மீதியை அறவிடுவதற்காக நிறுவனத்தினால் இதுவரை போதியளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2005 ஆம் ஆண்டிலிருந்து கலாசார அலுவல்கள் அமைச்சினால் மத்திய கலாசார நிதியத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த 32-4369 ஆம் இலக்க ஜீப் வண்டி 2011 ஆம் ஆண்டின் இறுதி வரையில் முறைப்படி மத்திய கலாசார நிதியத்திற்கு பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அபயகிரி சதுரப் பெட்டி பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான ரூபா 4,200,000 பெறுமதியான 100,000 பாதுகாப்புக் கற்கள் வழங்குவதற்கான ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதை நிராகரித்த ஒப்பந்தகாரரின் செயலாற்றல் பிணைப் பொறுப்பினை பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வருடக் கணக்காக பலப்பிட்டியவில் அமைந்துள்ள கருமுனி வளவின் புத்தகக் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள ரூபா 9,381,498 கிரயத்திலான விற்பனைக்காக உள்ள 68 வெளியீடுகளின் 24735 பிரதிகளை மீளாய்வாண்டின் இறுதி வரையில் விற்பதற்கோ அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

நிதியத்தின் 2 பிரதேச செயற்திட்டங்களில் சில வருடங்களாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காணப்படும் 26 வகைக்குரிய 14503 அலகுகளான இருப்பு பொருட்கள் மற்றும் பாவனைப் பொருட்கள் என்பன மீளாய்வாண்டின் இறுதிவரையில் தொடர்ந்தும் பயன்படுத்தாமல் காணப்பட்டது.

4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) 2000 ஆம் ஆண்டில் சீகிரியா பூங்காவின் தன்னியக்க நீர் தெளிக்கும் முறைமையை நிர்மாணிப்பதற்காக ஒரு தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்ட ரூபா 325,000 ஆன முற்பணம் அவ்வாண்டிலிருந்து தீர்க்கப்படாத முற்பணங்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த நிறுவனம் செயற்படாமல் இருந்ததால் முற்பண பிணை காலாவதியாவதற்கு முன்னர் அத்தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் தீர்க்கப்படாத முற்பணப் பிணை உருவாகியிருந்தது.

(ஆ) சுற்றுலாப் பிரயாணிகளுக்கான நுழைவுச்சீட்டுக்களின் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் 25 இற்கு 1 என்ற அடிப்படையில் வழங்கப்படும் ஊக்குவிப்பு நுழைவுச்சீட்டுக்களின் பெறுமதி 2011 ஆம் ஆண்டு ரூபா 35,883,472 ஆகக் காணப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை சிறப்பாக இருந்தமையினால் உபகார நுழைவுச்சீட்டுக்களை விநியோகிக்க வேண்டிய தேவைப்பாடு எழாமையால் ரூபா 36 மில்லியனுக்கு அண்மித்த வருமானம் நிதியத்திற்குக் கிடைக்காமல் போயிருந்தது.

4.5 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதியத்தின் செயற்பாட்டிற்கு நேரடியாகத் தாக்கம் செலுத்தும் 10 சிரேஷ்ட நிலைப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் பல்வேறு பதவிகளுக்கு பதில் கடமையாற்றல் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், 1 தொடக்கம் 9 ஆண்டுகள் வரை பதில் கடமையாற்றும் 18 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 658,521 ஆன தொகை பதில் கடமைக் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர் எண்ணிக்கை 322 ஆக இருந்த போதிலும் 2011 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான நிரந்தர சிற்றூழியர் எண்ணிக்கை 811 ஆகக் காணப்பட்ட போதும், அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் 276 பேர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். நிறுவனத்தின் அபிப்பிராயம் மற்றும் ஆலோசனைகளை கருத்திற் கொள்ளாது ஊழியர்களின் தேவைப்பாட்டை முறையாக இனங்காணாது, முறையற்ற ரீதியில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டிருந்ததாக முகாமைத்துவத்தால் அறிக்கையிடப்பட்டிருந்தது.

5 கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

5.1 ஆண்டறிக்கைகளை சபைக்குச் சமர்ப்பித்தல்

நிதியத்தினால் 2005, 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ஆண்டறிக்கை 2012 ஜுன் 30 ஆம் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2011 ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் எதிர்பார்த்த நிதிச் செயலாற்றல் மற்றும் உள்ளபடியான செயலாற்றல என்பன 20% தொடக்கம் 224% வரை வீச்சில் விலகியிருந்திருந்தமை அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

06 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமை மற்றும் கட்டுப்பாடு குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன்பட்டோர்
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) விசேட நிதியப் பயன்பாடு
(ஈ) நிதிக் கட்டுப்பாடு
(உ) கணக்கீடு
(ஊ) சுற்றுலாப் பயணிகளுக்கான நுழைவுச் சீட்டுக்களை அச்சடித்தல், இருப்புக் கட்டுப்பாடு மற்றும் உபகார நுழைவுச் சீட்டுக்கள் போன்றவற்றை விற்பனை செய்தல்,
(எ) பிராந்திய அலுவலகங்களின் கட்டுநிதிக் கட்டுப்பாடு

ஒப்பம்: எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபத

2011ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்று
மத்திய கலாசார நிதியம்
(கலாசார, கலை அலுவல்கள் அமைச்சு)

2011 திசெம்பர் 31ஆம் திகதியன்று உள்ளவாறான நிதிக்கூற்று

சொத்து	குறிப்பு	2011ரூ.	2012 ரூ.
நடைமுறைச் சொத்துக்கள்			
காசும் காசுக்குச் சமனானவையும்	1	124,277,902	12,004,259
கிடைக்க வேண்டியவை	2	16,787,112	5,101,933
பொருட் பட்டியல்	3	54,048,304	51,590,901
முதலீடுகள்		50,000,000	25,000,000
		245,113,318	93,697,093
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
கிடைக்க வேண்டியவை	4	141,484,821	46,003,273
விசேட நிதிக் கருத்திட்டங்கள்		626,471	1,962,949
சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள்	5	761,289,618	46,669,048
பணிக்கொடை முதலீடு		70,650,358	19,913,920
		974,051,268	114,549,190
மொத்தச் சொத்துக்கள்		1,219,164,586	208,246,283
பொறுப்புகள்			
நடைமுறைப் பொறுப்புகள்			
செலுத்த வேண்டியவையும் அட்டுறுவும்			
நடைமுறை அல்லாத சொத்துக்கள்	6	67,258,395	20,706,815
பணிக்கொடை நிதி	7	342,773,911	282,560,019
விசேட நிதிக் கருத்திட்டங்கள்	8	11,868,619	60,446,100
வெளிநாட்டு நிதிக் கருத்திட்டங்கள்	9	20,579,053	18,653,069
மொத்த பொறுப்புகள்		442,479,978	382,366,003
தேறிய சொத்துகள்		776,684,608	(174,119,720)
மூலதனம் வழங்கப்பட்டது :			
திரண்ட நிதி		19,944,705	19,944,705
ஒதுக்கம்		16,604,386	16,064,386
சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		353,250,000	-
வெளிநாட்டு வள நிதியம்		344,118,064	-
திரண்ட மிகை / பற்றாக்குறை		43,307,453	(210,128,811)
		776,684,608	(174,119,720)

சரத் வீரசேகர பத்திரண
நிதிப் பணிப்பாளர் - பதில் கடமை
மத்திய கலாசார நிதியம்

பேராசிரியர் காமினி அதிகாரி
நிதிப் பணிப்பாளர் - பதில் கடமை
மத்திய கலாசார நிதியம

வசந்த ஏகநாயக
பிரதம நிர்வாக உத்தியோகத்தர்
ம.க.நி மற்றும் கலாசார, கலை
அலுவல்கள் அமைச்சின்
செயலாளர்

2011 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான நிதி அறிக்கை

வருமானம்	குறிப்பு	ரூ.	ரூ.
நுளைவுச் சீட்டு விற்பனை	10	1,027,218,619	764,622,361
உருவநேர்படி விற்பனை வருமானம்	11	(352,749)	4,101,207
வெளியீடுகள் விற்பனை வருமானம்	12	2,502,878	7,798,592
அச்சிடல் மூலம் கிடைத்த தொகை	13	5,200,781	(632,783)
அரசாங்கத்தின் அளிப்புகள்		25,000,000	55,000,000
உதவி வழங்கும் நிறுவனங்களிலிருந்து கிடைத்தவை		2,163,936	1,891,403
முதலீடுகளால் கிடைத்த தொகை		8,499,996	-
ஏனைய வருமானங்கள்		20,805,766	8,409,647
		1,091,039,229	
செலவுகள்			
சம்பளங்களும் வேதனங்களும்	14	602,331,975	547,795,233
பணிக்கொடை		71,239,003	22,605,932
பெறுமானத் தேய்வு		10,387,486	6,263,585
அறவிடமுடியாக் கடன், வருமதிக்கான ஒதுக்கீடு		-	577,278
சந்தைப்படுத்தல் மேம்பாடும் மக்கள் தொடர்பும்		5,696,198	1,881,588
வழங்கலும் பயன்படுத்தப்பட்ட நுகர்வுப் பண்டங்களும்		69,776,803	20,685,922
சொத்து, பொறி மற்றும் உபகரண பழுதுகள்		22,009,013	12,078,738
உடன்படிக்கைச் சேவைகள்		22,682,340	19,107,484
நிதி ஆகுசெலவு		584,243	1,217,602
கணக்காய்வுச் செலவுகள்		175,000	763,325
ஆண்டுக்கான மிகை / பற்றாக்குறை		51,157,262	742,670
		856,029,244	633,719,357

2011 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான காசு பாய்ச்சல் கூற்று

தொழிற்பாட்டு நடவடிக்கைகளினாலான காசு பாய்ச்சல்	ரூ.	ரூ.
ஆண்டுக்கான மிகை / பற்றாக்குறை		235,009,985
<u>காசு அல்லாத அசைவுகள் மீதான சீராக்கல்</u>		
பெறுமானத் தேய்வு	10,387,406	
கடந்த ஆண்டுடன் சீராக்கல்	18,426,279	
நிலையான சொத்து விற்பனையால் கிடைத்த இலாபம்	(103,900)	
பணிக்கொடை நிதி	71,239,003	81,626,409
செயற்பாட்டு முலதன வகை மாற்றத்திற்கு முந்திய தொழிற்பாட்டு விளைவு		334,958,773
<u>தொழிற்பாட்டு மூலதன மாற்றம்</u>		
கிடைக்க வேண்டியவை		(95,481,548)
பொருட் பட்டியல்		(2,457,403)
செலுத்த வேண்டியவையும் அட்டுறுவும்	46,551,580	(51,387,371)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளினாலான தேறிய தொகை	283,571,402	
<u>முதலீட்டுச் செயற்பாடுகளினாலான காசு பாய்ச்சல்</u>		
நிலையான சொத்து கொள்வனவு	(27,639,912)	
நிலையான சொத்து விற்றல்	103,900	
முதலீடுகளில் (அதிகரிப்பும் / குறைவும்)	(75,736,438)	
நீண்ட கால வருமதி அதிகரிப்பு	(11,685,179)	
முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட தேறிய தெகை		(114,957,629)
<u>நிதிச் செயற்பாடுகளினாலான காசு பாய்ச்சல்</u>		
பணிக்கொடை செலுத்துதல்	(11,025,111)	
விசேட நிதிக் கருத்திட்டங்கள்	(47,241,003)	
வெளிநாட்டு நிதிக் கருத்திட்டங்கள்	1,925,984	
நிதிச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்ட தொகை		(56,340,130)
காசு மற்றும் காசுக்குச் சமனானவற்றின் தேறிய பண அதிகரிப்பு		112,273,643
வருட ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமனானவையும்		12,004,259
காசு, காசுக்குச் சமனானவற்றின் தேறிய பண அதிகரிப்பு		112,273,643
வருட இறுதியில் காசும் காசுக்குச் சமனானவையும		124,277,902

2011 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான மொத்த மாற்றம் தொடர்பான கூற்று

	திரண்ட நிதி	மூலதன ஒதுக்கம்	மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	வெளிநாட்டு ஒதுக்க நிதி	ஒதுக்க மிகை	மொத்தம்
2011/01/01 திகதியில் மீதி	19,944,704.58	16,064,386.48	0.00	0.00	(210,128,810.67)	(174,119,719.61)
கழி -						
மீள்மதிப்பீட்டு மிகை			353,250,000.00			353,250,000.00
வெளிநாட்டு நிதி				402,446,592.34		402,446,592.34
ஆண்டுக்கான மிகை					235,009,984.63	235,009,984.63
முன்னைய ஆண்டில் சீராக்கல்					18,426,279.08	18,426,279.08
	19,944,704.58	16,064,386.48	353,250,000.00	402,446,592.34	43,307,453.04	835,013,136.44
கழி : பெறுமானத் தேய்வு நிதி				(58,328,528.50)		(58,328,528.50)
2011/12/31 திகதியன்று மீதி	19,944,704.58	16,064,386.48	353,250,000.00	344,118,063.84	43,307,453.04	893,341,664.94